தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்: 152/மா/2022
நாள்: 14.01.2023

திரு. இரா. மயில்சாமி, புதுவிளாங்குடி,
மதுரை – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர், மண்டலம் –02,
மதுரை மாநகராட்சி, மதுரை. – எதிர்மனுதாரர்

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.05ல் வசிக்கும் திரு.இரா.மயில்சாமி என்பவரின் 27.08.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 29.08.2022–ல் பெறப்பட்டு 152/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## <u>ஆணை</u>

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.05ல் வசிக்கும் திரு.இரா.மயில்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 27.08.2022 நாளிட்ட தனது மனுவில் :

" மதுரை மாநகராட்சி பழைய வார்டு 23, புதிய வார்டு 1, பழைய மண்டலம்–1, புதிய மண்டலம்–2, புதுவிளாங்குடி, தேசிய நெடுஞ்சாலையின் தெற்குபக்கத்தில், பேருந்து நிறுத்தத்தில் (Bus stop) பயணியர் நிழற்குடை இல்லை. புதிய பயணியர் நிழற்குடை வேண்டி கடந்தாண்டு மாண்புமிகு முதலமைச்சர் தனி பிரிவிற்கு இணையதளம் வழியாக மனு செய்தேன். என்னுடைய மனு ம.பொ.1/001865/2021 நாள் 03.08.2022 ஏற்கப்பட்டு நடப்பாண்டில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஒப்புதல் பெற்றபின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று இணையதளம் வழியாக தெரிவித்து உள்ளார்கள். சுமார் 13 மாதங்களாக என் மனுவின் மீது எந்த ஒரு நடவடிக்கையும் மதுரை மாநகராட்சி அலுவலர்கள் எடுக்கவில்லை. பயணியர் நிழற்குடை இல்லாததால் மேற்கே செல்லும் பேருந்திற்காக பரவை, சமயநல்லூர், சோழவந்தான், வாடிபட்டிக்கு டவுன் பஸ்க்கு செல்லும் பயணிகளும், திண்டுக்கல், வத்தலக்குண்டு, பெரியகுளம், பழனி, பொள்ளாச்சி, கோவை, சேலம் செல்லும் பயணிகள் சிறியவர், பெரியவர்கள், கர்ப்பிணிப்பெண்கள், மருத்துவமனை செல்லும் பயணிகள், பள்ளிக்கு செல்லும் மாணவ மாணவியர்கள் வெயிலிலும், மழையிலும் நின்று கொண்டு பேருந்து வரும்வரை காத்திருந்து பேருந்தில் செல்ல வேண்டியுள்ளது. இதை மாநகராட்சி அலுவலர்கள் சிறிதளவு கூட பொருட்படுத்தாமல் நிழற்குடை வைக்க முன் வரவில்லை. இதன் பின்பு 31.07.2022 தேதியில் மதுரை மாவட்ட ஆட்சியருக்கு இணையம் வழியாக (GDT) வழியாக புது விளாங்குடியில்

தெற்கு புறத்தில் பேருந்து பயணிகள் நிழற்குடை வேண்டி மனு அனுப்பி இருந்தேன். என்னுடைய மனுவை 2022/9005/24/395768/0731 தேதி 31.07.2022 புதிய மனு தாக்கல் செய்தேன். என்னுடைய மனுவினை மாவட்ட ஆட்சித்தலைவரின் அலுவலகத்திலிருந்து மதுரை மாநகராட்சிக்கு 17.08.2022 தேதியில் அனுப்பப்பட்டது. சுமார் 13 மாதங்களாக மெத்தனப்போக்காகவும், தன் கடமை செய்ய தவறிய உதவி ஆணையர், மண்டலம் –02(வடகது) மற்றும் உதவி செயற்பொறியாளர் அவர்கள் மீது கடுமையான துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டும், விரைவாக பயணியர் நிழற்குடை புது விளாங்குடியில் அமைத்து கொடுத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை வேண்டிக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 03.01.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி 21.12.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

3) மதுரை மாநகராட்சி, உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப்பொறியாளர் ஆகிய இருவரும் 03.01.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்:

" மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள வார்டு எண் 23 புது விளாங்குடி பேருந்து நிறுத்தத்தின் தென்புறத்தில் பயணியர் நிழற்குடை தேவையான நிதி ஒதுக்கீடு செய்து இன்னும் ஓரிரு மாதங்களில் அமைக்கப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

4) மனுதாரர் 03.01.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணையில் உடல்நலக்குறைவினால் ஆஜராகவில்லை. ஆனால் 05.01.2023 அன்று நடைபெற்ற பிரிதொரு மனுவின் மீதான நேரடி விசாரணையில் ஆஜராகும்போது இந்நேர்வு குறித்து தன்கைப்பட எழுதியுள்ள விவரங்களை முறைமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். அதில்

" மதுரை மாநகராட்சி மண்டலம்–02, வார்டு–1, புது விளாங்குடி, பழைய விளாங்குடி 10,000(பத்தாயிரம்) மக்கள் வசிக்கும் பகுதியாகும். இவர்கள் தினந்தோறும் வெளியூர்களுக்கு சென்று பணி செய்பவர்கள். மேலும் முதியோர்கள், பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்கள், கர்ப்பிணிப்பெண்கள் போன்றவர்கள் மற்றும் மருத்துவமனைக்கு செல்லக்கூடிய நபர்கள், புதுவிளாங்குடி பஸ் நிறுத்தம் வந்து சமயநல்லூர், பரவை, சோழவந்தான், கொடைரோடு, நிலக்கோட்டை, வத்தலக்குண்டு, பெரியகுளம், திண்டுக்கல், பழனி, பொள்ளாச்சி, கோவை, சேலம், பெங்களூரு செல்லக்கூடியவர்கள் இப்பேருந்து நிறுத்தம் தென்புறத்தில் காத்திருந்து வெளியூர் சென்று வருகிறார்கள்.

மேற்படி பஸ் நிறுத்தத்தில் நிழற்குடை இல்லாமல் இருப்பதினால், வெயிலிலும், மழையிலும், பயணிகள், முதியவர்கள், சிறியவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், பள்ளி மாணவ மாணவியர்கள், மற்றும் சிகிச்சைக்கு செல்லும் நோயாளிகள் மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள். புதுவிளாங்குடி பஸ்நிறுத்தத்தில் நிழற்குடை வேண்டி மாவட்ட ஆட்சியர்அவர்களுக்கு இரண்டு வருடங்களுக்கு முன்பு 03.08.2021 தேதியில் இணையதளம் வழியாக (GDP) கோரிக்கை மனு அனுப்பி இருந்தேன். ஆனால் நடவடிக்கை எடுக்கவில்லை. பின்பு மீண்டும் நிழற்குடை வேண்டி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு 17.08.2022 தேதியில் இணையதளம் வழியாக (GDP) கோரிக்கை மனு அனுப்பி இருந்தும் இன்றுவரை சிறு நடவடிக்கை கூட எடுக்கவில்லை. இதுகுறித்து எனக்கு ஒரு கடிதம் கூட அனுப்பவில்லை. மக்கள் வரிபணத்தில் சம்பளம் பெற்றுக்கொண்டும், மக்கள் வரிப்பணத்தை தேவையற்ற வீணான செலவு செய்துவரும் மதுரை மாநகராட்சி, மக்களுக்கு மிக முக்கிய அடிப்படை வசதியான நிழற்குடை அமைக்க முன்

வரவில்லை. நான் இரண்டு வருட காலமாக போராடி வருகிறேன். மக்களைப்பற்றி சிறிது கூட நினைத்து பார்க்காமலும் அவர்களுடைய கஷ்டத்தை பெரிதுபடுத்தாமலும் இதுவரையில் நிழற்குடை அமைக்க நடவடிக்கை எடுக்காத முன்னாள், இந்நாள் அலுவலர்கள் மீது கடுமையான துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டும் விரைவாக புது விளாங்குடி பேருந்து நிறுத்தத்தில் (Bus stand) நிழற்குடை அமைத்து கொடுக்க உத்தரவிட்டும் பொதுமக்களின் சிரமங்களில் இருந்து விடுபட பொது மக்கள் சார்பாக மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தை வேண்டிக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5) மனுதாரரது புகார் மனு, மனுதாரரின் 05.01.2023 நாளிட்ட கையால் எழுதப்பட்ட அறிக்கை, மற்றும் மதுரை மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் மதுரை மாநகராட்சி வார்டு எண் 23 புது விளாங்குடி பேருந்து நிறுத்தத்தின் தென்புறத்தில் வயதானவர்கள், மாணவ மாணவியர், பெண்கள் மற்றும் குழந்தைகளின் நலன் கருதி பயணியர் நிழற்குடை அமைக்க கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள புது விளாங்குடி பேருந்து நிறுத்தத்தின் தென்புறத்தில் பயணியர் நிழற்குடை அமைக்க தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இன்னும் ஒரிரு மாதங்களில் அமைக்கப்படும் என மாநகராட்சி அலுவலர்கள் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளனர்.

மாநகராட்சி அலுவலர்கள் இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துள்ளவாறு வார்டு எண் 23 புதுவிளாங்குடி பேருந்து நிறுத்தத்தின் தென்புறத்தில் தேவையான நிதியினை ஒதுக்கி இன்னும் ஒரிரு மாதங்களில் பயணியர் நிழற்குடையினை அமைத்திடவும், இதுகுறித்த நிறைவு அறிக்கையை (completion report) இம்முறைமன்ற நடுவத்திற்கு 31.03.2023க்குள் அனுப்பி வைக்குமாறு மதுரை மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

2023–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 14–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திரு. இரா.மயில்சாமி,
த/பெ. இராமலிங்கம்,
மனை எண்.5, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி,
மதுரை – 625 018.

2)ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை.

3) உதவி ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை.

4)நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

5)இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032

செயலாளருக்காக